ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வியமுடை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ வியமுடை ‖

## திருக்கண்ணபுரம் - 7

‡வியமுடை விடையினம்⋆ உடைதர மட மகள்⋆
குயமிடை தட வரை⋆ அகலம் அதுடையவர்⋆
நயமுடை நடையனம்⋆ இளையவர் நடை பயில்⋆
கயமிடை கணபுரம்⋆ அடிகள் தம் இடமே (1)

இணை மலி மருதினொடு⋆ எருதிற இகல் செய்து⋆
துணை மலி முலையவள்⋆ மணமிகு கலவியுள்⋆
மண மலி விழவினொடு⋆ அடியவர் அளவிய⋆
கண மலி கணபுரம்⋆ அடிகள் தம் இடமே (2)

புயலுறு வரை மழை⋆ பொழிதர மணி நிரை⋆
மயலுற வரை குடை⋆ எடுவிய நெடியவர்⋆
முயல் துளர் மிளை முயல் துள⋆ வள விளைவயல்⋆
கயல் துளு கணபுரம்⋆ அடிகள் தம் இடமே (3)

ஏதலர் நகைசெய⋆ இளையவர் அளை வெணெய்⋆
போது செய்தமரிய⋆ புனிதர் நல் விரை⋆ மலர்
கோதிய மதுகரம்⋆ குலவிய மலர் மகள்⋆
காதல்செய் கணபுரம்⋆ அடிகள் தம் இடமே (4)

தொண்டரும் அமரரும்⋆ முனிவரும் தொழுதெழ⋆
அண்டமொடகல் இடம்⋆ அளந்தவர் அமர் செய்து⋆
விண்டவர் பட⋆ மதிள் இலங்கை முனெரியெழ⋆
கண்டவர் கணபுரம்⋆ அடிகள் தம் இடமே (5)

மழுவியல் படையுடை⋆ அவனிடம் மழை முகில்⋆
தழுவிய உருவினர்⋆ திருமகள் மருவிய⋆
கொழுவிய செழு மலர்⋆ முழுசிய பறவை பண்⋆
எழுவிய கணபுரம்⋆ அடிகள் தம் இடமே (6)

பரிதியொடணி மதி⋆ பனிவரை திசை நிலம்⋆
எரிதியொடெனவின⋆ இயல்வினர் செலவினர்⋆
சுருதியொடரு மறை⋆ முறை சொலும் அடியவர்⋆
கருதிய கணபுரம்⋆ அடிகள் தம் இடமே (7)

படி புல்கும் அடியிணை⋆ பலர் தொழ மலர் வைகு⋆
கொடி புல்கு தடவரை⋆ அகலமதுடையவர்⋆
முடி புல்கு நெடுவயல்⋆ படை செல அடி மலர்⋆
கடி புல்கு கணபுரம்⋆ அடிகள் தம் இடமே (8)

புலமனு மலர்மிசை⋆ மலர் மகள் புணரிய⋆
நிலமகள் என இன⋆ மகளிர்கள் இவரொடும்⋆
வலமனு படையுடை⋆ மணி வணர் நிதி குவைக்⋆
கலமனு கணபுரம்⋆ அடிகள் தம் இடமே (9)

‡மலி புகழ் கணபுரமுடைய⋆ எம் அடிகளை⋆
வலிகெழு மதிளயல்⋆ வயலணி மங்கையர்⋆
கலியன தமிழ் இவை⋆ விழுமிய விசையினொடு⋆
ஒலி சொலும் அடியவர்⋆ உறுதுயர் இலரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥